

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் இல-30, எட்டாம் வாய்க்கால்
உருத்திரபுரம், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர்

# சண்முகம் அமரசிங்கம்

அவர்களின் சிவபதப் பேறு குறித்த



# 31 ஆம் நாள் நினைவு மலர்

## 23.01.2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அமரர்

# திரு. சண்முகம் அமரசிங்கம்

அவர்களின் அமரத்துவம் குறித்த

# சொல் வெட்டு

# 23.01.2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

விதைகள் மரமாகி நிழல் தரும் வேளை
அன்பு, பண்பும் பாசமும் கற்று தந்த
அன்புத் தெய்வம் இன்று எம்மோடு
இல்லை பஞ்ச பூதங்கள் நிலைத்திருப்பது
போல் அன்பு தெய்வமாம்
தங்களின் புகழும் நிலைத்திருக்க
இம்மலரை உம் பாதக் கமலங்களுக்கு
காணிக்கையாக சமர்ப்பிக்கின்றோம்


**ஓம்! சாந்தி**

**குடும்பத்தினர்**
**சகோதரா சகோதரிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"



மண்ணில்

1946
-
04
-
24

விண்ணில்

2021
-
12
-
24

அமரர்

# சண்முகம் அமரசிங்கம்

அவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# இறை துதிப்பாக்கள்



## பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

### விநாயகர் துதி

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே

## திருவாசகம்

தந்தையார் தாயார் உடன் பிறந்தோர்
தாரமார் புத்திரரார் தாந்தாமாரே
வந்தவாறெங்ஙனே போமாறேதோ
மாயாம் அதற்கேதும் மகிழ வேண்டாம்
சிந்தையீர் உமக்கொன்று சொல்லக்கேண்மின்
திகழ்மதியும் வாளரவும் திழைக்கும் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சிவாய
என்றெழுவார் இருவிசும்பில் இருக்கலாமே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்தது ஓர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வ கூத்து உகந்தாயை
தொண்டனேன் விளம்புமா விளம்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லை
சிற்றம்பலமே இடமாக
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவோம்

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகி
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற்குமரேசா
கறையானை கிளையோனே கதிர்காமப் பெருமானே

### வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

### திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கை சுவடுப்பாதையில்

ஈழத்துதிருநாட்டில் வட புலத்தோடு அமைந்த கடல் சூழ் வளம் கொளிக்கும் பால் தீவு அல்லது பசுந்தீவு என சிறப்பிக்கப்படும் நெடுந்தீவு மண்ணில் தணிறாயகம் முதலிகள் பரம்பரையில் வந்துதித்த சண்முகம் என்னும் அண்ணல் உடனே கைப்பிடித்த சாந்தமும் அழகும் பொருந்தி அம்மையார் பூரணம் அவர்கட்கும் சீரும் சிறப்பும் கொண்ட வாழ்க்கை பயணத்தின் பலனாக துரைச்சாமி, நடராஜா தனலட்சுமி, என்ற மூத்த சகோதரர்களுடனும் தர்மபுத்திரன், புஸ்பலட்சுமி, சரஸ்வதி, மகேந்திரன் செல்வநாயகம் ஆகிய இளைய சகோதர்களுடனும் கூடிய சண்முகம் பூரணம் தம்பதியினரின் நான்காவது தவபுதல்வனாய் சித்திரைத் திங்கள் 24ம் நாள் 1946 ஆண்டு அன்னைமடியில் வந்துதித்த ஆண்மகனுக்கு பெற்றோர் அமரசிங்கம் என பெயரிட்டு நன்நாளில் இவரது சிறுபிள்ளை குறும்பு தனமும் கெட்டித்தனத்தையும் பார்த்து அனைவரும் செல்மாய் சிங்கம் என அழைத்தும் வந்தனர்.

இவர் தன் இளமைக் காலத்தில் நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் கல்வியைக் கற்றார் கல்வியில் மட்டுமன்றி விளையாட்டுகளிலும் சிறப்புற விளங்கியமையால் நெடுந்திவு விளையாட்டுக் கழகத்தில் சிறந்த தொரு விளையாட்டு வீரானாகவும் திகழ்ந்தார் தன் சொந்த ஊரில் சிங் ஸ்ருடியோவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவி நல்லதோர் படப்பிடிப்பாளராக பணியாற்றி வந்தார். காலமும் நேரமும் கூடிவரும் நன்நாட்களில் சின்னப்பர் கனகம்மா தம்பதியினரின் செல்வமகளாம் ஞானமலரை பொன்னான நன்நாளில் கரம்பிடித்து உருத்திரபும் எட்டம் வாய்காலை வாழ்விடமாக்கி வாழ்ந்து வரும்நாளில் சாரதா, பிரபாகரன், ரமேஸ் எனும் மூன்று முத்துக்களை பெற்றெடுத்து அவர்களை பார்பேற்ற வளர்த்தெடுத்து மூத்த இருசெல்வங்களும் சிறந்த வாழ்கையை அமைத்து கொடுத்து சிறந்த ஒரு தந்தையாய் முன்னைநாள் கிளிநொச்சி ராஜா புகைப்பட கலையகத்தை நாடத்தி வந்த உத்தமான மனிதர் இவர் மட்டுமன்றி சொந்தமான நிலத்தில் உழதுண்டு வாழம் விவாசய பணியை செவ்வனோ ஆர்வத்துடன் செய்து மகிழ்ந்தவர்
காலத்தில் விதிபலனால் 2021 ம் ஆண்டு மார்கழி மாதம் 24ம் நாள் எல்லோருக்கும் ஓர் அதிர்ச்சியை தந்து இவ்வுலகைவிட்டு இறைவனடி சேர்ந்து விட்டார்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவியின் ஏக்கம்

கரம் பிடித்த நாளுஞ் முதல்
துன்பம் என்று துவளவில்லை
துடிக்கவில்லை துணை நின்று
துள்ளியமாய் முடிவெடுத்து
என்னுடனே குழந்தைகள்
வளர்தெடுத்து உங்களை
இழந்துவிடடேன் ஐயகோ

## மக்கள் தவிப்பு

அன்புடன் கண்டிக்கும் உங்களின்
பாசக் குரலை இழந்துவிட்டோம்
இன்பமாய் எம்முடன் வழிகாட்டியாய்
ஆதரவாளனாய், தோழனாய், ஏணிபடியாய்,
எங்களை உயர்த்தி விட்டு
எங்களின் இனிய இன்ப வாழ்க்கையை பார்க்காது விட்டு
பிரிந்து விட்டீர்களே அப்பா
உங்களை அழைக்க ஏங்கி தவிக்கின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரர்கள் சகோதரிகள் ஆற்றாமை

கூடி பிறந்து
கூட்டாய் வாழ்ந்தோம்
கூடு விட்டு பிரிந்தால்
கூடிய உறவு பிரியாது
புத்திமதி சொல்லும் தோழனாய்
வாழ்ந்து உங்களை
இழந்து தவிக்கிறோம்
சகோதரனின் இழப்பை
யார் ஆற்றுவார்?

## மருமக்கள் புலம்பல்

அன்னையாய்
அப்பாவாய்
தோழனாய்
ஆசானாய்
பல வடிவில் வழிகாட்டியாய்
அமைந்த உறவு மாமா
உங்களை இழந்துவிட்டோம்
யார் எமக்கு இனி?

## தேற்றம்

சீராய் வாழ்ந்து வையகமே போற்ற
சிறப்புற்ற அன்னார் அரனடியில் போய்
சிவபதம் அடைந்ததாமே – தாழ்ந்தி
சிரம் வணங்கி நிற்கின்றோம் எந்நாளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஞ்சலிக்கிறோம்

பெரும் அதிர்ச்சியாய் செவிகளிலே விழுந்தன
உங்களின் செய்தி மௌனத்தின் இருப்பிடமாய்
பண்பின் பிறப்பிடமாய் உலாவி வரும்
உங்களின் உயிரை காலனவன்
களவாடி விட்டனோ
வெய்யில் மழை பாராது வியர்வை
சிந்தி தன் நிலத்தை பண்படுத்தி
விதைத்துண்டு வாழ்ந்த தங்கள்
ஆரோக்கிய மேனி தன்னை
பல படை யொடுப்பில் தான்
கவர்ந்திருப்பான் காலனவன்
கத்திருந்து தனிமையில் இடுக்கும் பேலது
கல்வி விட்டானே மிளாக்கள்
அயரும் உங்கள் செய்தி கனக்க வைக்கிதே நெஞ்சத்தை
உள்ளம் புலுங்க தவிக்கும் உறவினர்
துயர் துடைக்கு யார் வருவார் ஆறுதல்
கூறுகிறேம் உங்களின் யாத்திரை
முடியும் முன்னே மீளாநித்திரையாய்
போனதை எண்ணி பிரார்த்திக்கின்றோம் ஆத்மா சாந்திக்காய்

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்த சஷ்டி கவசம் பாடல் வரிகள்

நேரிசை வெண்பா
துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்கு செல்வம் பலித்துக் கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலனருள்
கந்தர் சஷ்டி கவசம் தனை.

குறள் வெண்பா
அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி...

சஷ்டியை நோக்கச் சரவணபவனார்
சிஷ்டருக்குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணியாட
மையல் நடம் செய்யும் மயில்வாகனனார்
கையில் வேலால் எனைக் காக்கவென் றுவந்து
வர வர வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலாய் எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக....

ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவணபவனார் சடுதியில் வருக
ரகணபவச ரரரர ரரர
ரிகண பவச ரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீராநமோ நம
நிபவ சரவண நிற நிற நிறென்

வசர ஹணபவ வருக வருக
என்னையாளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசங்குசமும்
பரந்த விழிகள் பன்னிர ண்டிலங்க
விரைந்தென்னைக் காக்க வேலோன் வருக
ஐயம் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென் முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலியாம் சிவகுகன் தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடியாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்

பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலங்கு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தினமாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகுடைய திருவயிறுந்தியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவண்ட மருங்கில் சுடரொளிப்பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இருதொடை யழகும் இணைமுழந்தாளும்
திருவடியதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொக மொக மொகமொக மொக மொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடு டுடுடுடு டுடுடு
டகு டகு டிகு டிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முரகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்றும்
உன் திருவடியை உறுதியென்றெண்ணும்
என் தலைவைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க்குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேலிரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவியிரண்டும் வேலவர் காக்க
நாசிகளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பத்திருபல் முனைவேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங்கழுத்தை இனியவேல் காக்க
மார்பை ரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேலிருதோள் வளம் பெறக்காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடையழகுற செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் குறியிரண்டும் அயில் வேல் காக்க

பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
ஐவிரலடியினை அருள் வேல் காக்க
கை களிரண்டும் கருணை வேல் காக்க
முன் கையிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இரக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க

ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கி சதுர்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழங்கடை முனியும்
கொள்ளிவாற் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம்மராட்ச தரும்
அடியனைக் கண்டால் அலறிக கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிரும் எதிர்ப்படு மன்னரும்
கனபூசை கொள்ளும் காளியோட னைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என் பெயர் சொல்லவும் இடி விழுந்தோடிட
ஆனையடியினில் அரும்பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைகளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகலசத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும;
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப்போக்கும்

அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட

மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாள்எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய் விட்டலறி மதிகெட்டோடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடனங்கம் கதறிடக் கட்டு
கட்டியுருட்டு கால் கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர் வடிவேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடு விடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுழுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பு பித்தம்
சூலை சயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிhதி
பக்கப்பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்தரணை பருஅரையாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீயெனக்கு அருள்வாய்
ஈரேழுலகமும் எனக்குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எ னக்காய்
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துறவாக
உன்னைத் துதித்த உன்திருநாமம்
சரவணபவனே சைலொளிபவனே
திரிபுரபவனே திகழொளிபவனே
பரிபுரபவனே பவமொழிபவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிதிருமுருகா அமராபதியைக்
காத்துத் தேவர்கள் கடும் சிறை விடுத்தாய்

கந்தா குகனே கதிர்வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முரகா
தணிகாசலனே சங்கரன் புதல்வா
பழநிப் பதிவாள் பாலகுமரா
ஆவினன் குடிவாள் அழகிய வேலா

செந்தின்மா மலையுறும் செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத்தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முரகனைப்
பாடினே னாடினேன் பரவசமாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடனிரஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்தி பெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குறமகளுடன்
வாழ்க வாழ்க வாரணத்துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பதுன் கடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரியமளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென்றடியார் தழைத்திட வருள் செய்
கந்தசஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடனாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவதுமாகி
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத்தாறுரு கொண்டு

ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்ட திக்குள்ளோர் அடங்கலும் வசமாய்
திசைமன்ன ரெண்மர் செயலதருள்வர்
மாற்றலாரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மையளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீரெட்டாய் வாழ்வர்
கந்தர் கை வேலாம் கவசத்தடியை
வழியாய் காண மெய்யாய் விளங்கும்
வழியாய் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிப்பொடியாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வசத்துரு சங்காரத்தடி
அறிந்தெனதுள்ளம் அஷ்டலெக்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துணவாக
சூரபத்மாவைத் துணித்தகையதனால்
இருபத்தேழ்வர்க்கு உவந்தமுதளித்த
குருபரன் பழனிக் குன்றினிலிருக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத் தடுத்தாட் கொள் என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனாபதியே போற்றி
குறமகள் மனமகள் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பாயுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெற்றி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனகசபைக்கோர் அரசே
மயில் நடமிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவணபவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவபுராணம்
## திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்
வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க

வேகம் கெடுத்துஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறந்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி

ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவ புராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்.

கண் நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண் நிறைந்தும் மண் நிறைந்தும் மிக்காய்
விளங்கொளியாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிறந்து எல்லை இலாதானே நின் பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்
எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு
உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய் ஞானம் ஆகி மிளிர் கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே

ஆக்கம் அளவு இறுதி இல்லாய்இ அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்
தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய் விண்ணோர்கள் ஏத்த

மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன்
தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி,
மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரானே

பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் இல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டு உணர்வார்
தம்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் என் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத
நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து
அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனை உள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லை உள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து
சொல்லுவார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

## திருப்பொற்சுண்ணம்

முத்துநல்தாழம்பூமாலைதூக்கி
முளைக்குடந்தூபம்நல்தீபம்வைம்மின்
சக்தியும்சோமியும்பார்மகளும்
நாமகளோடுபல்லாண்டிசைமின்
சித்தியுங்கௌரியும்பார்ப்பதியும்
கங்கையும்வந்துகவரிகொண்மின்
அத்தன்ஐயாறன்அம்மானைபாடி
ஆடப்பொற்சுண்ணம்இடித்துநாமே.

பூவியல்வார்சடைஎம்பிராற்குப்
பொற்றிருச்சுண்ணம்இடிக்கவேண்டும்
மாவின்வடுவகிரன்னகண்ணீர்
வம்மின்கள்வந்துடன்பாடுமின்கள்
கூவுமின்தொண்டர்புறநிலாமே
குனிமின்தொழுமினெங்கோனெங்கூத்தன்
தேவியுந்தானும்வந்தெம்மையாளச்
செம்பொன்செய்சுண்ணம்இடித்துநாமே.

சுந்தரநீறணிந்தும்மெழுகித்
தூயபொன்சிந்திநிதிபரப்பி
இந்திரன்கற்பகம்நாட்டியெங்கும்
எழிற்சுடர்வைத்துக்கொடியெடுமின்
அந்தார்கோன்அயன்தன்பெருமான்
ஆழியான்நாதன்நல்வேலன்தாதை
எந்தரம்ஆளுமையாள்கொழுநற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேய்ந்தபொற்சுண்ணம் இடித்துநாமே.
காசணிமின்கள்உலக்கையெல்லாம்
காம்பணிமின்கள்கறையுரலை
நேசமுடையஅடியவர்கள்

நின்றுநிலாவுகஎன்றுவாழ்த்தித்
தேசமெல்லாம்புகழ்ந்தாடுங்கச்சித்
திருவேகம்பன்செம்பொற்கோயில்பாடிப்
பாசவினையைப்பறிந்துநின்று
பாடிப்பொற்சுண்ணம்இடித்துநாமே.

அறுகெடுப்பார்அயனும்அரியும்
அன்றிமற்றிந்திரனோடமரர்
நறுமுதுதேவர்கணங்களெல்லாம்
நம்மிற்பின்பல்லதெடுக்கவொட்டோம்
செறிவுடைமும்மதில்எய்தவில்லி
திருவேகம்பன்செம்பொற்கோயில்பாடி
முறுவற்செவ்வாயினீர்முக்கணப்பற்
காடப்பொற்சுண்ணம்இடித்துநாமே.

உலக்கைபலஓச்சுவார்பெரியர்
உலகமெலாம்உரல்போதாதென்றே
கலக்கஅடியவர்வந்துநின்றார்
காணஉலகங்கள்போதாதென்றே
நலக்கஅடியோமைஆண்டுகொண்டு
நாண்மலர்ப்பாதங்கள்சூடந்தந்த
மலைக்குமருகனைப்பாடிப்பாடிமகிழ்ந்து
பொற்சுண்ணம்இடிந்தும்நாமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடகந்தோள்வளைஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர்குழாமெழுந்தார்ப்பஆர்ப்ப
நாடவர்நந்தம்மைஆர்ப்பஆர்ப்ப

நாமும்அவர்தம்மைஆர்ப்பஆர்ப்பப்
பாடகமெல்லடியார்க்குமங்கை
பங்கினனெங்கள்பராபரனுக்கு

ஆடகமாமலைஅன்னகோவுக்
காடப்பொற்சுண்ணம்இடித்தும்நாமே.

வாள்தடங்கண்மடமங்கைநல்லீர்
வரிவளைஆர்ப்பவண்கொங்கைபொங்கத்
தோள்திருமுண்டந்துதைந்திலங்கச்
சோத்தெம்பிரானென்றுசொல்லிச்சொல்லி
நாட்கொண்டநாண்மலர்ப்பாதங்காட்டி
நாயிற்கடைப்பட்டநம்மையிம்மை
ஆட்கொண்டவண்ணங்கள்பாடிப்பாடி
ஆடப்பொற்சுண்ணம்இடித்தும்நாமே.

வையகம்எல்லாம்உரலதாக
மாமேருஎன்னும்உலக்கைநாட்டி
மெய்யெனும்மஞ்சள்நிறையஅட்டி
மேதகுதென்னன்பெருந்துறையான்
செய்யதிருவடிபாடிப்பாடிச்
செம்பொன்உலக்கைவலக்கைபற்றி
ஐயன்அணிதில்லைவாணனுக்கே
ஆடப்பொற்சுண்ணம்இடித்தும்நாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தணிகொங்கைகள்ஆடஆட
மொய்குழல்வண்டினம்ஆடஆடச்
சித்தஞ்சிவனொடும்ஆடஆடச்
செங்கயற்கண்பனிஆடஆடப்
பித்தெம்பிரானொடும்ஆடஆடப்
பிறவிபிறரொடும்ஆடஆட
அத்தன்கருணையொடாடஆட

ஆடப்பொற்சுண்ணம்இடித்தும்நாமே.
மாடுநகைவாள்நிலாவெறிப்ப

வாய்திறந்தம்பவளந்துடிப்பப்
பாடுமின்நந்தம்மைஆண்டவாறும்
பணிகொண்டவண்ணமும்பாடிப்பாடித்
தேடுமின்எம்பெருமானைத்தேடி
சித்தங்களிப்பத்திகைத்துத்தேறி
ஆடுமின்அம்பலத்தாடினானுக்
காடப்பொற்சுண்ணம்இடித்தும்நாமே.

மையமர்கண்டனைவானநாடர்
மருந்தினைமாணிக்கக்கூத்தன்தன்னை
ஐயனைஐயர்பிரானைநம்மை
அகப்படுத்தாட்கொண்டருமைகாட்டும்
பொய்யர்தம்பொய்யனைமெய்யர்மெய்யைப்
போதரிக்கண்ணிணைப்பொற்றொடித்தோள்
பையரவல்குல்மடந்தைநல்லீர்
பாடிப்பொற்சுண்ணம்இடித்தும்நாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னிடைச்செந்துவர்வாய்க்கருங்கண்
வெண்ணகைப்பண்ணமர்மென்மொழியீர்
என்னுடைஆரமுதெங்களப்பன்
எம்பெருமான்இமவான்மகட்குத்
தன்னுடைக்கேள்வன்மகன்தகப்பன்
தமையன்எம்ஐயன்தாள்கள்பாடிப்
பொன்னுடைப்பூண்முலைமங்கைநல்லீர்
பொற்றிருச்சுண்ணம்இடித்தும்நாமே.

சங்கம்அரற்றச்சிலம்பொலிப்பத்
தாழ்குழல்சூழ்தருமாலையாடச்
செங்கனிவாயிதழுந்துடிப்பச்
சேயிழையீர்சிவலோகம்பாடிக்
கங்கைஇரைப்பஅராஇரைக்குங்

கற்றைச்சடைமுடியான்கழற்கே
பொங்கியகாதலிற்கொங்கைபொங்கப்
பொற்றிருச்சுண்ணம்இடித்தும்நாமே.

ஞானக்கரும்பின்தெளியைப்பாகை
நாடற்கரியநலத்தைநந்தாத்
தேனைப்பழச்சுவைஆயினானைச்
சித்தம்புகுந்துதித்திக்கவல்ல
கோனைப்பிறப்பறுத்தாண்டுகொண்ட
கூத்தனைநாத்தழும்பேறவாழ்த்திப்
பானல்தடங்கண்மடந்தைநல்லீர்
பாடிப்பொற்சுண்ணம்இடித்தும்நாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவகைநாமும்வந்தன்பர்தம்போ
டாட்செய்யும்வண்ணங்கள்பாடிவிண்மேல்
தேவர்கனாவிலுங்கண்டறியாச்
செம்மலர்ப்பாதங்கள்காட்டுஞ்செல்வச்
சேவகம்ஏந்தியவெல்கொடியான்
சிவபெருமான்புரஞ்செற்றகொற்றச்
சேவகன்நாமங்கள்பாடிப்பாடிச்
செம்பொன்செய்சுண்ணம்இடித்தும்நாமே.

தேனகமாமலர்க்கொன்றைபாடிச்
சிவபுரம்பாடித்திருச்சடைமேன்
வானகமாமதிப்பிள்ளைபாடி
மால்விடைபாடிவலக்கையேந்தும்
ஊனகமாமழுச்சூலம்பாடி
உம்பரும்இம்பரும்உய்யஅன்று
போனகமாகநஞ்சுண்டல்பாடிப்
பொற்றிச்சுண்ணம்இடித்தும்நாமே.

அயன்தலைகொண்டுசெண்டாடல்பாடி
அருக்கன்எயிறுபறித்தல்பாடி
கயந்தனைக்கொன்றுரிபோர்த்தல்பாடிக்
காலனைக்காலால்உதைத்தல்பாடி
இயைந்தனமுப்புரம்எய்தல்பாடி
ஏழைஅடியோமைஆண்டுகொண்ட
நயந்தனைப்பாடிநின்றாடியாடி
நாதற்குச்சுண்ணம்இடித்தும்நாமே.
வட்டமலர்க்கொன்றைமாலைபாடி
மத்தமும்பாடிமதியம்பாடிச்
சிட்டர்கள்வாழுந்தென்தில்லைபாடிச்
சிற்றம்பலத்தெங்கள்செல்வம்பாடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியமாசுணக்கச்சைப்பாடிக்
கங்கணம்பாடிக்கவித்தகைம்மேல்
இட்டுநின்றாடும்அரவம்பாடி
ஈசற்குச்சுண்ணம்இடித்தும்நாமே.

வேதமும்வேள்வியும்ஆயினார்க்கு
மெய்ம்மையும்பொய்ம்மையும்ஆயினார்க்குச்
சோதியமாய்இருள்ஆயினார்க்குத்
துன்பமுமாய்இன்பம்ஆயினார்க்குப்
பாதியுமாய்முற்றும்ஆயினார்க்குப்
பந்தமுமாய்வீடும்ஆயினார்க்கு
ஆதியும்அந்தமும்ஆயினார்க்கு
ஆடப்பொற்சுண்ணம்இடித்தும்நாமே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோத்திரத் திரட்டுக்கள்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே.

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருஆல வாயான் திருநீறே.

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருஆல வாயான் திருநீறே.

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு வந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆல வாயான் திருநீறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருத்தம தாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே.

எயிலது வட்டது நீறு விருமைக்கும் உள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தாலவா யான் திருநீறே.

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி ஆலவா யான்திரு நீறே.

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் மாலவா யான்திரு நீறே.

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங்கூட
கண்டிகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளார் ஏத்துந் தகையது நீறு
அண்டத்த வர்பணிந் தேத்தும் ஆலவா யான்திரு நீறே.

ஆற்றல் அடல்விடை யேறும ஆலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்னனுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாரம்

கூற்றாயின வாறுவி லக்ககிலீர் கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேஇர வும்பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.

இடரினுந் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை யாளுமா
றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள்
ஆவடு துறையரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவுள்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனை நாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழம் வெள்ளி
சனிபாம்பி ரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற் பாதமும் காணப் பெற்றால்
மனி(த்)தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே

யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

அருளுடைச் சுடரே அளிந்ததோர் கனியே
பெருந்திறல் அருந்தவர்க் கரசே
பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த
போகமே யோகத்தின் பொலிவே
தெருளிடத் தடியார் சிந்தையுட் புகுந்த
செல்வமே சிவபெரு மானே
இருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்புனக் கில்லா ஒருவனே அடியேன்
உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே
மெய்ப்பதம் அறியா வீறிலி யேற்கு
விழுமிய தளித்ததோ ரன்பே
செப்புதற் கரிய செழுஞ்சுடர் மூர்த்தி
செல்வமே சிவபெரு மானே
எய்ப்பிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

பாசவே ரறுக்கும் பழம்பொருள் தன்னைப்
பற்றுமா றடியனேற் கருளிப்
பூசனை உகந்தென் சிந்தையுட் புகுந்து
பூங்கழல் காட்டிய பொருளே
தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தி
செல்வமே சிவபெரு மானே
ஈசனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறஎறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கி னுள்ஒளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ
அடல்விடைப் பாகா அம்பலக் கூத்தா

அயனொடு மால்அறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்

தொண்டனேன் பணியுமா பணியே

தற்பரம் பொருளே சசிகண்ட சிகண்டா
சாமகண் டா அண்ட வாணா
நற்பெரும் பொருளாய் உரைகலந் துன்னை
என்னுடை நாவினால் நவில்வான்
அற்பன்என் உள்ளத் தளவிலா உன்னைத்
தந்தபொன் னம்பலத் தரசே
கற்பமாய் உலகாய் அல்லைஆ னாயைத்
தொண்டனேன் கருதுமா கருதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையிற் சிறுமை பெண்ணொடா ணாய்என்
பிறப்பிறப் பறுத்தபே ரொளியே
கருமையின் வெளியே கயற்கணாள் இமவான்
மகள்உமை யவள்களை கண்ணே
அருமையின் மறைநான் கோலமிட் டரற்றும்
அப்பனே அம்பலத் தமுதே
ஒருமையிற் பலபுக் குருவிநின் றாயைத்
தொண்டனேன் உரைக்குமா றுரையே

கோலமே மேலை வானவர் கோவே
குணங்குறி இறந்ததோர் குணமே
காலமே கங்கை நாயகா எங்கள்
காலகாலா காம நாசா
ஆலமே அமுதுண் டம்பலம் செம்பொற்
கோயில்கொண் டாடவல் லானே
ஞாலமே தமியேன் நற்றவத் தாயைத்
தொண்டனேன் நணுகுமா நணுகே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பால்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன் அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசற்குஆட் செய்மின் குழாம் புகுந்து
அண்டங் கடந்த பொருள்அள வில்லதோர்ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள் என்றே பல்லாண்டு கூறுதுமே.

தாதையைத் தாளற வீசிய சண்டிக்(கு) இவ் அண்டத்தொடும் உடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற் கோயிலும் போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும் நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று விம்மி மிகுதிரு ஆரூரின்
மழவிடை யாற்கு வழிவழி யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

1. கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் ...... அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ
கற்பகம் எனவினை ...... கடிதேகும்

மத்தமு மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய ...... மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு ...... பணிவேனே

முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய ...... முதல்வோனே

முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடிசெய்த ...... அதிதீரா

அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை ...... இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் ...... பெருமாளே.

2. பக்கரைவி சித்ரமணி பொற்கலணை யிட்டநடை
பட்சியெனு முக்ரதுர ...... கமுநீபப்
பக்குவம லர்த்தொடையும் அக்குவடு பட்டொழிய
பட்டுருவ விட்டருள்கை ...... வடிவேலும்

திக்கதும திக்கவரு குக்குடமும் ரட்சைதரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றடியு முற்றியப ...... னிருதோளும்
செய்ப்பதியும் வைத்துயர்தி ருப்புகழ்வி ருப்பமொடு
செப்பெனஎ னக்கருள்கை ...... மறவேனே

இக்கவரை நற்கனிகள் சர்க்கரைப ருப்புடனெய்
எட்பொரிய வற்றுவரை ...... இளநீர்வண்
டெச்சில்பய றப்பவகை பச்சரிசி பிட்டுவெள

ரிப்பழமி டிப்பல்வகை ...... தனமூலம்
மிக்கஅடி சிற்கடலை பட்சணமெ னக்கொளொரு
விக்கிநச மர்த்தனெனும் ...... அருளாழி
வெற்பகுடி லச்சடில விற்பரம ரப்பரருள்
வித்தகம ருப்புடைய ...... பெருமாளே

3. உம்பர்தருத் தேநுமணிக் ...... கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் ...... துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் ...... பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் ...... றருள்வாயே

தம்பிதனக் காகவனத் ...... தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் ...... கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் ...... பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் ...... பெருமாளே.

4. நினது திருவடி சத்திம யிற்கொடி
நினைவு கருதிடு புத்திகொ டுத்திட
நிறைய அமுதுசெய் முப்பழ மப்பமு ......
நிகழ்பால்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடிய வளைமுறி இக்கொடு லட்டுகம்
நிறவில் அரிசிப ருப்பவல் எட்பொரி
நிகரில் இனிகத லிக்கனி வர்க்கமும் ...... இளநீரும்

மனது மகிழ்வொடு தொட்டக ரத்தொரு
மகர சலநிதி வைத்தது திக்கர
வளரு கரிமுக ஒற்றைம ருப்பனை ...... வலமாக

மருவு மலர்புனை தொத்திர சொற்கொடு
வளர்கை குழைபிடி தொப்பண குட்டொடு
வனச பரிபுர பொற்பத அர்ச்சனை ...... மறவேனே

தெனன தெனதென தெத்தென னப்பல
சிறிய அறுபத மொய்த்துதி ரப்புனல்
திரளும் உறுசதை பித்தநி ணக்குடல் ...... செறமுளை

செரும உதரநி ரப்புசெ ருக்குடல்
நிரைய அரவநி றைத்தக ளத்திடை
திமித திமிதிமி மத்தளி டக்கைகள் ...... செகசேசே

எனவெ துகுதுகு துத்ததென ஒத்துகள்
துடிகள் இடிமிக ஒத்துமு ழக்கிட
டிமுட டிமுடிமு டிட்டிமெ னத்தவில் ...... எழுமோசை
இகலி அலகைகள் கைப்பறை கொட்டிட
இரண பயிரவி சுற்றுந டித்திட
எதிரு நிசிசர ரைப்பெலி யிட்டருள் ...... பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர ...... எனவோதும்

முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும் ...... அடிபேணப்

பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் ...... இரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வதும் ...... ஒருநாளே

தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு ...... கழுதாடத்

திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக ...... எனவோதக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென ...... முதுகூகை
கோட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல ...... பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துப்பா

வானமுகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நல்தவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர்அகவல்



சீதக்களபச்செந்தாமரைப்பூம்
பாதச்சிலம்புபலவிசைபாடப்
பொன்னரைஞாணும்பூந்துகில்ஆடையும்
வன்னமருங்கில்வளர்ந்தழகெறிப்பப்
பேழைவயிறும்பெரும்பாரக்கோடும்

வேழமுகமும்விளங்குசிந்தூரமும்
அஞ்சுகரமும்அங்குசபாசமும்
நெஞ்சிற்குடிகொண்டநீலமேனியும்
நான்றவாயும்நாலிருபுயமும்
மூன்றுகண்ணும்மும்மதச்சுவடும்

இரண்டுசெவியும்இலங்குபொன்முடியும்
திரண்டமுப்புரிநூல்திகழொளிமார்பும்
சொற்பதம்கடந்ததுரியமெய்ஞ்ஞான'

அற்புதம்நிறைந்தகற்பகக்களிறே!
முப்பழநுகரும்மூஷிகவாகன!
இப்பொழுதென்னைஆட்கொளவேண்டித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயாயெனக்குத்தானெழுந்தருளி
மாயாப்பிறவிமயக்கம்அறுத்துத்

திருந்தியமுதலைந்தெழுத்தும்தெளிவாய்ப்
பொருந்தவேவந்தென்உளந்தனில்புகுந்து

குருவடிவாகிக்குவலயந்தன்னில்
திருவடிவைத்துத்திறமிதுபொருளென
வாடாவகைதான்மகிழ்ந்தெனக்கருளிக்
கோடாயுதத்தால்கொடுவினைகளைந்தே
உவட்டாஉபதேசம்புகட்டியென்செவியில்

தெவிட்டாதஞானத்தெளிவையும்காட்டி
ஐம்புலன்தன்னைஅடக்கும்உபாயம்
இன்புறுகருணையின்இனிதெனக்கருளிக்
கருவிகளொடுங்கும்கருத்தினையறிவித்(து)
இருவினைதன்னைஅறுத்திருள்கடிந்து

தலமொருநான்கும்தந்தெனக்கருளி
மலமொருமூன்றின்மயக்கம்அறுத்தே
ஒன்பதுவாயில்ஒருமந்திரத்தால்
ஐம்புலக்கதவைஅடைப்பதும்காட்டி
ஆறாதாரத்(து) அங்குசநிலையும்

பேறாநிறுத்திப்பேச்சுரையறுத்தே
இடைபிங்கலையின்எழுத்தறிவித்துக்
கடையிற்சுழுமுனைக்கபாலமும்காட்டி
மூன்றுமண்டலத்தின்முட்டியதூணின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்றெழுபாம்பின்நாவில்உணர்த்திக்

குண்டலியதனிற்கூடியஅசபை
விண்டெழுமந்திரம்வெளிப்படஉரைத்து
மூலாதாரத்தின்மூண்டெழுகனலைக்
காலால்எழுப்பும்கருத்தறிவித்தே
அமுதநிலையும்ஆதித்தன்இயக்கமும்

குமுதசகாயன்குணத்தையும்கூறி
இடைச்சக்கரத்தின்ஈரெட்டுநிலையும்
உடல்சக்கரத்தின்உறுப்பையும்காட்டிச்
சண்முகதூலமும்சதுர்முகசூக்கமும்
எண்முகமாகஇனிதெனக்கருளிப்

புரியட்டகாயம்புலப்படஎனக்குத்
தெரியெட்டுநிலையும்தெரிசனப்படுத்திக்
கருத்தினில்கபாலவாயில்காட்டி
இருத்திமுத்தியினிதெனக்கருளி
என்னையறிவித்(து) எனக்கருள்செய்து

முன்னைவினையின்முதலைக்களைந்து
வாக்கும்மனமும்இல்லாமனோலயம்
தேக்கியேயென்றன்சிந்தைதெளிவித்(து)
இருள்வெளியிரண்டுக்(கு) ஒன்றிடம்என்ன
அருள்தரும்ஆனந்தத்(து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுத்தியென்செவியில்
எல்லையில்லாஆனந்தம்அளித்(து)
அல்லல்களைந்தேஅருள்வழிகாட்டிச்
சத்தத்தின்உள்ளேசதாசிவம்காட்டிச்
சித்தத்தின்உள்ளேசிவலிங்கம்காட்டி
அணுவிற்(கு) அணுவாய்அப்பாலுக்(கு)
அப்பாலாய்க்

கணுமுற்றிநின்றகரும்புள்ளேகாட்டி
வேடமும்நீறும்விளங்கநிறுத்திக்
கூடுமெய்த்தொண்டர்குழாத்துடன்கூட்டி
அஞ்சக்கரத்தின்அரும்பொருள்தன்னை
நெஞ்சக்கருத்தின்நிலையறிவித்துத்
தத்துவநிலையைத்தந்தெனையாண்ட
வித்தகவிநாயகவிரைகழல்சரணே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது மனமார்ந்த நன்றிகள்

எமது குடும்பத் தலைவனும் எங்கள் அன்புத் தம்பியும் பாசம்மிகு அண்ணனின் பிரிவுத் துயர் கேட்டு ஓடோடி உடன் வந்து உதவியவர்களுக்கும் இல்லம் நாடி வந்து எமக்கு ஆறுதல் கூறி பலவழிகளிலும் உறுதுணையாக இருந்தவர்களுக்கும் இரங்கல்களை தெரிவித்தோருக்கும் கடமையில் இருந்த உத்தியோகத்தர்களுக்கும், வைத்தியசாலை சமூகத்தினருக்கும், பதாதைகள், இரங்கல்கள் அச்சிட்டுதந்த உறவுகளுக்கும் புலம்பெயர் தேசத்திலிருந்து தொலைபேசியில் அறுதல் தெரிவித்தவர்களுக்கும் இன் நூலை அச்சிட்டு வழங்கிய சூரியன் பதிப்பகத்தினருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிய புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை நல்கி நிற்கின்றோம்.

**ஓம் சாந்தி**

**அன்புடன்**
**குடும்பத்தினர்**
**சகோதரா சகோதரிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிநாயகம் முதலியார் வழி

தனுக்கோடி + கதிராசிப்பிள்ளை

↓

சண்முகம்
நாகலிங்கம்
மாரிமுத்து

→ சண்முகம் + பூரணம்

↓

துரைச்சாமி + பரமேஸ்வரி
↓
சசிகலா
சசிகரன்
மனோகரன்
பாஸ்கரன்
சந்திரகலா
சிறிகரன்
சிவகலா

நடராஜா (அமரர்)

தனலட்சுமி + சுப்பிரமணியம்
↓
வசந்தராஜன்
அற்புதராணி
கமலாராணி
நேசராஜன்
ராஜ ராஜன்
சுகிர்தராணி

தர்மபுத்திரன் + அமிதாம்பிகை
↓
பிரதீபன்
காண்டீபன்
டயான
துளசி

அமரசிங்கம் + ஞானமலர்

↓

சாரதா + கருணகரன்
யகுர்சன்
சயோட்
சாருஜன்

பிரபாகரன் + தர்சினி
விருட்ச்சிகா
அபினாஸ்
அஸ்வந்த்

ரமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லியார் வழித்தோன்றல்

ஆறுமுகம் + வைரவப்பிள்ளை

↓

பூரணம்

கம் + பூரணம்

↓

| | | | | |
|---|---|---|---|---|
| தர்மபுத்திரன் | புஸ்பலட்ச்சுமி | சரஸ்வதி | மகேந்திரன் | செல்வநாயகம் |
| + | + | + | + | + |
| அமிதாம்பிகை | செல்வராஜா | ஜேம்ஸ் | சுபாசினி | ஜெகதா |
| ↓ | ↓ | ↓ | ↓ | ↓ |
| பிரதீபன்<br>காண்டீபன்<br>டயான<br>துளசி | அபர்ணா<br>பிரத்தனா<br>நர்த்தனா | ஜேனித்தன் | நிசாந்தினி | மார்வின் |

↓

ரமேஸ் ( அமரர் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள், அது வேறோருவருடையதாகும்.
"இதுவே உலக நியதியும், எனது படைப்பின் சாராம்சமாகும்"

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

சூரியன் பதிப்பகம் திருநகர் வீதி கிளிநொச்சி.
T.P- 0772882142

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org